UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஐந்திலக்கண யாப்பு நூல்களின் உரை வரலாறு



**கு. தாரணி**
முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10

**முனைவர் பெ. இளையாப்பிள்ளை**
பேராசிரியர், இலக்கியத்துறை



**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கண வரலாற்றில் ஐந்திலக்கண நூல்கள் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. ஐந்திலக்கணத்தில் யாப்பியல் இலக்கணம் தனித்த மரபினையும் தொன்மையையும் கொண்டுள்ளது. இந்த யாப்பு நூல்களுடைய உரையின் வரலாற்றினையும் அமைப்பினையும் இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம். வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் சுவாமிநாதம் போன்றவை ஐந்திலக்கண நூல்களாகும். இந்நூல்களின் உரை வரலாற்றையும் தொல்காப்பியத்தின் உரை வரலாற்றையும் இக்கட்டுரை விளக்குகின்றது. தொல்காப்பியத்தை ஐந்திலக்கண நூல் என்று கூறுவது மரபன்று இருப்பினும் ஐந்து இலக்கணங்களைப் பற்றியும் தொல்காப்பியம் கூறுவதால் தொல்காப்பியமும் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது. யாப்பருங்கலக்காரிகையும் யாப்பியலில் மிகமுக்கியமான நூல் என்பதால் காரிகையும் இக்கட்டுரையில் இடம்பெறுகின்றது. இந்நூல்களினுடைய உரை வரலாற்றினை இவ்வாய்வுக் கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

**திறவுச் சொற்கள்**

வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தொல்காப்பியம், காரிகை, உரை, உரையாசிரியர்.

**முன்னுரை**

உரை என்பது பழைய நூலுக்கு பொருள் விளக்கம் தரும் வகையில் உருவானது. ஆனால் இன்று உரை என்பது ஒரு கலைச்சொல்லாக மாற்றம் பெற்றுள்ளது. உரை என்பது பேச்சு உரை, எழுத்து உரை என்றும் வகைப்படுத்தப்படுகிறது. உரை என்று கூறும் போது அதற்கு ஒரு மூல நூல் இருக்க வேண்டும் என்பதும், அந்நூலை எழுதிய ஆசிரியர் மற்றும் அதற்கு உரை எழுதிய ஆசிரியர் என்று இருக்க வேண்டும் இதுவே அடிப்படை. இலக்கியம் காலத்திற்கு காலம் மாற்றம் அடைவதைப் போலக் காலந்தோறும் இலக்கணமும் அதன் உரைகளும் மாற்றம் அடைகின்றது. இலக்கண உரைகளில் எழுத்து, சொல் இலக்கண உரையின் வளர்ச்சியும் – யாப்பு இலக்கண உரையின் வளர்ச்சி மாறுபட்டுக்காணப்படுகிறது. யாப்பு குறித்து விளக்கும் ஐந்திலக்கண நூல்களின் உரை வரலாறு எவ்வாறாக உள்ளது என்பதையும் காரிகையின் உரை வரலாறு எவ்வாறாகக் காணப்படுகிறது என்பதைக் குறித்தும் இக்கட்டுரையின் வழிக் காணலாம்.

**தமிழ் இலக்கண உரை வரலாறு**

தமிழ் உரை மரபு தொன்மையானது. பல இலக்கிய, இலக்கண நூல்கள் தோற்றம்

பெற்றதைப் போல அவற்றின் உரைகளும் தோற்றம் பெற்றது. பொருளை தெளிய வைத்தல் என்பது இவற்றின் அடிப்படை. இலக்கண உரைகளுக்கும், இலக்கிய உரை களுக்கும் இடையில் பல வேறுபாடுகள் காணப்படுகிறது. அதனை அ. தாமோதரன் விளக்குகிறார். "உரை என்பது தனித்ததோர் இலக்கிய வகை, அதற்கென ஒரு அமைப்பும் தனிப்பண்புகளும் நடையும் உள்ளன. இலக்கண உரைக்கும் இலக்கிய உரைக்கும் அவை பொதுவாக இருக்கும் என துணிந்து சொல்லமுடியாது; கூடாது. இலக்கண இலக்கிய உரையாசிரியர்களுக்கிடையே ஒருமைப்பாடு இருப்பது இயல்பு. என்று கூறுகிறார்.

இலக்கியங்களின் மொழிநடையை விட, இலக்கணங்களின் நூற்பா நடை கடினமாகக் காணப்படுவதால் இலக்கியங்களை விட இலக்கணங்களுக்கு உரை மிகவும் தேவைப் படுகிறது. தமிழ் இலக்கண உரை வரலாறு தொல்காப்பியம் தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரை பெரும் வளர்ச்சி பெற்று ள்ளது. இலக்கண நூல்களும் அவற்றிற்கான உரைகளும் தொடர்ந்து தோன்றி வந்துள்ளது.

**உரை குறித்த பதிவு**

உரை என்பது குறித்து தொல்காப்பியத்தி லும் நன்னூலிலும் பல இடங்களில் நமக்குக் கிடைக்கின்றது. உரை குறித்து தொல் காப்பியம் கூறுவது,

**பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்**
**கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்**
(தொல்.மரபு.103)

தொல்காப்பியத்தில் உரை குறித்த பதிவு களாக மரபியலில் நான்கு நூற்பாக்களும் செய்யுளியளிலும் களவியலிலும் காண முடிகிறது. உரை குறித்து பாவணந்தியாரும் விளக்குகிறார். சூத்திரம் என்ற சொல்லை பயன்படுத்துவதால் தொல்காப்பியம் வகுத்துக் கூறுகின்ற உரைக்கான வரையறைகளை நோக்கும் போது இவை அனைத்தும் இலக்கண நூலுக்கானது என்பதை அறிய முடிகிறது.

**யாப்பியல் உரைகள்**

தமிழ் இலக்கண உரை வரலாற்றில் யாப்பியல் என்னும் இலக்கணவகை சார்ந்து தோன்றயுள்ள அனைத்து உரைகளையும் காலத்தின் அடிப்படையில் பார்த்தால் யாப்பருங்கல விருத்தியுரையிலிருந்து தொடங்கி நல்ல வளர்ச்சி நிலையை கண்டுள்ளது. யாப்பியல் என்ற களத்தில் தோன்றிய உரைகள் சமகாலத்தில் தோன்றிய உரைகள், அதனை ஒட்டிய காலத்தில் தோன்றிய உரைகள், நெடுங்கால இடைவெளிக்குப் பிறகு தோன்றிய உரைகள் என யாப்பியல் உரைகள் அமைகின்றது.

**யாப்பருங்கலக்காரிகை**

தமிழ் யாப்பிலக்கண மரபில் தனித்து விளங்கக்கூடிய நூல் யாப்பருங்கலக்காரிகை. காரிகையின் உரையாசிரியர் குணசாகரர் என்று வழங்குவது இன்று வழக்கமாகும். ஆனால் காரிகையின் உரையாசிரியர் குணசாகரர் என்பது குறித்து இருவேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகிறது. ஒன்று குணசாகரர் நூலாசிரியர் அமிதசாகரரின் ஆசிரியர் என்றும் மற்றொன்று குணசாகரர் நூலாசிரியர் அமிதசாகரரின் மாணவர் என்பது. இதில் குணசாகரர் அமிதசாகரரின் ஆசிரியர் என்பதற்கு யாப்பருங்கல பாயிரம் சான்று தருகின்றது.

**தனக்குவரம் பாகிய தவத்தொடு புணர்ந்த**
**குணக்கடற் பெயரோன் கொள்கையின்**
**வழாஅத்** (யாப்.பாயிரம்)

என்று யாப்பருங்கலச் சிறப்புப்பாயிரம் முன்வைக்கிறது. இதனை மறுத்து ஆசிரியரின் நூலுக்கு மாணவர் உரை எழுதுவது மரபு. மாணவரின் நூலுக்கு ஆசிரியர் உரை எழுதுவது மரபில்லை என்று மு.அருணாசலம் கூறுகின்றார். இக்கூற்றிலிருந்து குணசாகரர் அமிதசாகரரின் மாணவர் என்றும் அவர் ஆசிரியரின் கருத்தை அறிந்து உரையெழுதி யுள்ளார் என்பதும் புலனாகிறது. இருவரும் ஒரே காலத்தை ஒட்டியவர்கள் என்று வரையரைசெய்யப்படுகிறது.

குணசாகரர் உரை காரிகைக்கு சுருக்க மாகவும், தெளிவாகவும் அமைகின்றது. விருத்தயுரையில் உள்ள வடமொழி கலப்பு எதுவும் காரிகை உரையில் இல்லை. யாப்பில் எளிமையான முறையில் உரை எழுதி யாப்பியல் உரை வரலாற்றில் சுட்டத்தகுந்த இடத்தை இக்காரிகை உரையாசிரியர் குணசாகரர் பெறுகின்றார்.

**தொல்காப்பியச் செய்யுளியலும் இளம்பூரணரும்**

தொல்காப்பியத்திற்கு கிடைக்கும் உரைகளில் காலத்தால் முந்தையது இளம்பூரணர் உரையே. தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் உரை கண்டவர் இளம் பூரணர் ஆவர். தொல்காப்பியப் பொருளதி

கார செய்யுளியல் பிற்கால யாப்பிலக்கண மரபின் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணை புரிந்துள்ளது இருப்பினும்காலத்தின் தேவைக் கருதி பல யாப்பிலக்கண நூல்கள் தொற்றம் பெற்றன. பிற்கால நூல்கள் தொல்காப்பியச் செய்யுளியல் மரபிலிருந்து மற்றதொரு தளத்தில் செயல்படத் தொடங்கியது. அந்த சூழலில்தான் இளம்பூரணர் தொல்காப்பியத் திற்கு உரை வகுக்கின்றார். எழுத்ததி காரத்திற்கும், சொல்லதிகாரத்திற்கும் உரை காணும்போது ஏற்படாத சிக்கல் பொருளதிகாரச் செய்யுளியலுக்கு உரை இயற்றும் போது ஏற்படுகின்றது. இந்த சிக்கலை எதிக்கொள்ளும் இளம்பூரணர் தொல்காப்பியத்திற்குச் சற்று முன்பின்னான கால இலக்கியங்களை அதற்கான விதிகளை இணைத்து மட்டும் உரை எழுதாமல் பிற்கால மரபுகளையும் செய்யுளியலில் பொருத்தி உரை எழுதுகின்றார்.

### வீரசோழியம்

தமிழ் ஐந்திலக்கண மரபில் முதல் நூலாக அறியப்படுவது வீரசோழியம். இதன் ஆசிரியர் புத்தமித்திரனார். வீரசோழியம் நூல் தோன்றிய காலத்தையொட்டியே உரையும் தோன்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் உரையாசிரியர் பெருந்தேவனார் ஆவார். நூலாசிரியர் புத்தமித்திரனாரின் மாணவர் என்றும் கூறுவார். தமிழ் உலகில் பெருந்தேவனார் பெயர் கொண்ட பலர் இருப்பினும் வீரசோழியத்திற்கு உரைகண்ட பெருந்தேவனார் அவர்களிலிருந்து வேறானவர் என்றே கூறவேண்டும். இவர் இவ்வொரு நூலிற்கு மட்டுமே உரை கண்டுள்ளார் என்பது தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வுரையின் சிறப்பினை தி.வே.கோபாலையர் எடுத்துரைக்கிறார்,

"புத்தமித்திரனாரின் வீரசோழியம் இன்றளவும் நின்று நிலவ, அவருடைய மாணாக்கராகிய இவ்வுரையாசிரியர் அந்நூலுக்கு எழுதியுள்ள உரையே அதற்குக் கவசம்போல அமைந்து அதனைப் பாதுகாத்து வந்துள்ளது என்று கூறலாம்." என்று கூறுகின்றார். நூலாசிரியரின் உள்ளக்கருத்தை நன்கு அறிந்து உரை இயற்றயுள்ளார், தமிழ், வடமொழி சார்ந்த சிந்தனைகளை முன்வைக்கக்கூடிய அந்த நூலை அதன் தன்மைகளோடு விளக்கயுரைத்தல் என்ற செயலில் பெருந்தேவனாரின் உரை தனித்துச் சுட்டக்கூடிய உரையாக விளங்குகிறது.

### இலக்கண விளக்கச் செய்யுளியல் உரை

திருவாரூர் வைத்தியநாத தேசிகரால் கி.பி.17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூலே இலக்கண விளக்கம். இந்நூலின் ஆசிரியர் இவர் என்றாலும் நூலின் முற்பகுதியில் பாயிரத்தையும் நூலின் பிற்பகுதியில் பாட்டியலயும் எழுதியவர்கள் அவரது மகன் களான சதாசிவ நாவலரும், தியாகராச தேசிகரும் ஆவர். இலக்கண விளக்கத்தின் பொருளதிகாரத்தில் நான்காம் இயலாகச் செய்யுளியல் அம்கின்றது. இலக்கண விளக்கம் 'குட்டித் தொல்காப்பியம்' என்று அழைக்கப்படுகின்றது. அவ்வாறாக அழைக்கப்பட்டாலும் செய்யுளியலில் கூறும் யப்பானது பிற்கால யாப்பிலக்க மரபினையே இந்நூல் பின்பற்றியுள்ளது. இதனை தி.வே.கோபாலையர் நமக்குக் கூறுகின்றார்,

"செய்யுளியலில் யாப்பருங்கல விருத்தி நூற்பாக்கள் பலவற்றை உருமாற்றாமலும், சிறிது திரித்தும் கொண்டுள்ளார் எனினும், செய்யுளியல் அமைப்பைப் பெரும்பான்மையும் யாப்பருங்கலக் காரிகையை ஒட்டியே கொண்டுள்ளார். எடுத்துக்காட்டுப் பாடல்களில் பெரும்பான்மையான யாப்பருங்கலக் காரிகையின் எடுத்துக்காட்டுப்பாடல்களே." என்றும் இவரின் கூற்று தெளிவுபடுத்துகிறது. இச் செய்யுளியல் 51 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. இலக்கண விளக்கத்தில் மூல நூலில் இடம்பெறாத பல கருத்துக்களை உரை கூறுகின்றது. தொடைகளின் உள்வகைகள், ஓசைகளின் உள்வகைகள் போன்றவை உரையில் மட்டுமே காணப்படுகின்றது. இவை யாப்பருங்கலம், யப்பருங்கலக் காரிகையினை அடியொற்றியேக் காணப் படுகின்றது. நூலாசிரியர்கள் கூறாததை உரையாசிரியர்களே வெவ்வேறு நிலைகளில் பொருள்கொள்கின்றனர், இதுவே நூலிற்கு வளம் சேர்க்கின்றது. அது போலவே இலக்கண விளக்கச் செய்யுளியலுக்கும் உரையாசிரியர் பொருள்கண்டுள்ளார்.

### தொன்னூல் விளக்கம்

ஐந்திலக்கண மரபில் வீரசோழியம், இலக்கண விளக்கத்தைத் தொடர்ந்து எழுந்த நூல் தொன்னூல் விளக்கம் ஆகும். இந் நூலின் ஆசிரியரும் உரையாசிரியரும் வீரமாமுனிவரே. தமிழ் இலக்கண வளர்ச்சிக்கு வீரமாமுனிவரின் பங்கு குறிப்பிடத்தக்கது.

"தொன்னூல் விளக்கம் தமிழ் மரபினையொட்டி எழுந்தது. பழைய இலக்கணக் கோட்பாடுகளைச் சுருக்கிக் கூறும்.

அதேபோழ்தில் பழையன கழிதலும் புதியன புகுதலும் ஆங்காங்கே காணப்படும். பிற இலக்கணங்கள் அவர் காலத்து மொழி பயில் வழக்குகளை மனத்திருத்திப் பழைய மரபினின்று மாறுவனவற்றைச் சுட்டிக்காட்டிக் கூறும்." என்று சூ.இன்னாசி கூறுகின்றார். 1838ஆம் ஆண்டில் தொன்னூல் விளக்கத்தை வீரமாமுனிவர் உரையோடு பதிப்பித்து வேதகிரி முதலியார் அவ்வுரையினை மேலும் விளக்கம் பெறச்செய்வதற்காகப் பல இலக்கண, இலக்கியங்களில் இருந்து மேற்கோள்களை எடுத்து அவ்வுரையில் இணைத்துள்ளார். அவர் இணைக்கப்பட்ட இடம்குறித்து குறிப்புகள் தராமல் மேற்கோள் காட்ட உதவிய நூல்கள் குறித்து பட்டியல் தந்துள்ளார். நன்னூல், நேமிநாதம் போன்ற பதினாறு நூல்களை அவர் பதிப்பின் முகப்புப் பக்கத்தில் நமக்குத் தருகின்றார். வீரமாமுனிவர் பயன்படுத்திய நூல்களையே வேதகிரி முதலியாரும் பயன்படுத்தியதால் இவை குழப்பத்தையே தருகின்றன. வீரமாமுனிவரின் இத்தகைய உரைபதிப்பே இன்று நமக்குக் கிடைக்கின்றது.

## முத்து வீரியம்

ஐந்திலக்கணம் கூறும் நூல்களில் முத்து வீரியமும் ஒன்று. இதன் ஆசிரியர் முத்துவீர உபாத்தியாயர். இந்நூலின் உரையாசிரியர் திருநெல்வேலித் திருப்பாற்கடனாதன் கவிராயர் ஆவர். இவரே இந்நூலில் இடம் பெறும் இரண்டு சிறப்புப் பாயிரங்களையும் இயற்றியுள்ளார். நூல் தோன்றிய காலத்தை யொட்டியே இவ்வுரையும் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் யாப்பதிகாரம் மட்டும் முதன் முதலில் அதன் பிறகு எழுத்து, சொல் மட்டும் வெளிவந்தது. 1982ஆம் ஆண்டு இதன் முழுப்பதிப்பு வெளிவந்தது. முதலில் வெளியில் வந்த பதிப்பிற்கும் இதற்கும் நூற்பா எண்ணிகையில் வேறுபாடு காணப் படுகிறது. இது குறித்தான தகவல்களை ஆனந்த நடராசன் நமக்குத் தருகின்றார்,

"ஐந்திலக்கணமும் அடங்கிய முழுநூலில் யாப்பதிகாரத்திற்குரிய நூற்பா 267 ஆகும்.

யாப்பதிகாரம் மட்டும் வெளிவந்த நூலில் அவ்வதிகாரத்திற்கு உரிய நூற்பா 124 ஆகும். (உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல்) இதைக் கண்ணுறும் போது யாப்பதிகாரத்திற்குப் பின் சில நூற்பாக்களை ஆசிரியர் சேர்த்தும், பழைய நூற்பாக்களை மாற்றியும் முழுநூலில் உள்ள யாப்பு அதிகாரத்தை உருவாக்கியிருத்தல் வேண்டும்" என்கிறார்.

## முடிவுரை

ஐந்திலக்கண யாப்பு நூல்களின் உரை வரலாறு என்ற இக்கட்டுரையில் ஐந்திலக்கண நூல்களான வீரசோழியம், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம் போன்ற நூல்களின் உரை வரலாறு பற்றியும் உரையின் சிறப்பினையும் உரை அமைப்பினையும் இவ்வாய்வுக் கட்டுரையின் வழி அறியலாம். இது மட்டுமின்றி தொல்காப்பிய செய்யுளியல் உரை குறித்தும் யாப்பருங்கலக்காரிகை குணசாகரரின் உரை குறித்தும் இக் கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

## துணை நூல் பட்டியல்

1. யாப்பருங்கலக்காரிகை, சரசுவதிமஹால் பதிப்பகம், தஞ்சாவூர்.
2. தொல்காப்பியம் (எழுத்து-சொல்-பொருள்) இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை-14.
3. பதிப்பியல், யாப்பியல் - அமுதநிலையம் லிமிடெட், சென்னை 1997.
4. சங்கரநமச்சிவாயர், அ.தாமோதரன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-2003
5. தமிழ் இலக்கண நூல்கள், ச.வெ.சுப்பிரமணியன். மெய்யப்பன் பதிப்பகம்-சென்னை.
6. தமிழ் இலக்கிய வரலாறு, மு.அருணாசலம். தி பார்க்கர், சென்னை 2005
7. இளம்பூரணர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
8. யாப்பியல் ஆய்வுக்கோவை, ந.வீ. செயராமன், இலக்கியப் பதிப்பகம்-சென்னை.2000
9. அற்றைநாட் காதலும் வீரமும், க.ப.அறவாணன். பாரி நிலையம், சென்னை.1978
10. தமிழில் யாப்பிலக்கண வளர்ச்சி, ய.மணிகண்டன், விழிகள் பதிப்பகம்,சென்னை.
11. தமிழ் யாப்பிலக்கண உரை வரலாறு, பா. இளமாறன், பரிசல் புத்தக நிலையம், சென்னை-2021.